# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்:58/பேரூ/2025**
**நாள் : 24.04..2026**

V. தேவதாஸ்,
திருவரம்பு,
கன்னியாகுமரி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
திருவட்டார் முதல்நிலை பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம். – எதிர் மனுதாரர்

கன்னியாகுமரி மாவட்டம், திருவரம்பு, செம்மந்தறை, கதவு எண். 8/30, குறிச்சி என்ற முகவரியில் வசிக்கும் திரு. V. தேவதாஸ் என்பவரது 23.01.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.01.2025 அன்று பெறப்பட்டு, 58/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், திருவரம்பு, செம்மந்தறை, கதவு எண். 8/30, குறிச்சி என்ற முகவரியில் வசிக்கும் திரு. V. தேவதாஸ் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 23.01.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"எனது அனுமதியில்லாமல் எனது பட்டா நிலத்திற்குள் அத்துமீறி நுழைந்து இடத்தை ஆக்கிரமிப்பு செய்து pipe connection வைத்ததை தொடர்பான புகார் மனு மற்றும் லஞ்சம் கேட்டு சித்திரவதைபடுத்துவது தொடர்பாக புகார் மனு சார்பு.

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். 68 வயதான எனக்கு ரீசர்வே 213/6R2 மற்றும் 213/6Y1A ஆகிய நிலம் கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் வட்டாட்சியர் சரகத்திற்குட்பட்டு குலசேகரம் A - வருவாய் கிராமத்தால் மேற்கண்ட சொத்தும் மற்றும் வீடும் எனக்கு உள்ளது. இந்த வீட்டிற்கு அருகே என்னுடைய பட்டா நிலத்தில் கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் பேரூராட்சி ஊழியர்கள் என் அனுமதியின்றி நான் வீட்டில் இல்லாத போது என் வீட்டின் பட்டா நில பகுதியில் அத்துமீறி நுழைந்து அவசர அவசரமாக நான் வருவதற்குள் தண்ணீர் connection வைத்து விட்டு சென்றுள்ளனர். இதைப்பற்றி 68 வயதான உடல்நிலை சரியில்லாத நான் பலமுறை பேரூராட்சி அலுவலகத்திற்கு சென்று கேட்கும்போதெல்லாம் கெழட்டு பயலே அது பேரூராட்சிக்கு சொந்தமான இடம் என தரகுறைவாக பேசி வருகின்றனர். எனது புகார் மனுவிற்கு

எந்த ஒரு மனு ஏற்பு ரசீதும் தராததால் இதைத் தொடர்ந்து 26.11.2024 அன்று பதிவஞ்சல் மூலமாக புகார் செய்தேன். இதற்கு இந்நாள் வரை மனு ஏற்பு ரசீதோ மற்றும் புகார் தீர்வு செய்யாத காரணம் குறித்தோ இதுவரை சம்பந்தப்பட்ட எழுத்துபூர்வமான கடிதங்கள் ஏதும் பேரூராட்சி அலுவலகத்திலிருந்து கிடைக்க பெறவில்லை. இதைத் தொடர்ந்து நான் 08.08.2024 அன்று நான் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலமாக நான் கொடுத்த புகார் மனு சம்பந்தமாக 3 தகவல்கள் கோரியிருந்தேன். அது சம்பந்தமாக எந்த தகவலும் எனக்கு வழங்கப்படவில்லை. இதைத் தொடர்ந்து 20 ஆயிரம் ரூபாய் கொடு pipe connection மாற்றித் தருகிறேன் என பேரூராட்சியில் நான் மீண்டும் நேரில் சென்றபோது செயல் அலுவலர் இவ்வாறு மிரட்டுகிறார். செயல் அலுவலரின் இந்த செயல் என் வளர்ச்சியில் காழ்ப்புணர்ச்சி கொண்ட நபர்கள் என் நிலத்தை பொது பேரூராட்சி வழி மற்றும் பொது குடிநீர் குழாய் போல சித்தரிக்கும் வண்ணம் எண்ணத்தை தூண்டும் அளவுக்கு உள்ளது. எனவே மாண்புமிகு நடுவர் அவர்கள் விசாரணை செய்து செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சி உதவி இயக்குநர், Ex. பேரூராட்சி தலைவர் உள்ளிட்டோரை நடவடிக்கை எடுத்து pipe connection அப்புறப்படுத்தி நான் கூறிய எதிரிகள் மீது நடவடிக்கை (துறை) எனக்கு 25,00,000 ரூபாய் இழப்பீடு பெற்றுத் தருமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் வேண்டுமென்றே உள்நோக்கத்தோடு எனது புகார்மனு கிடப்பில் போடப்பட்டு நடவடிக்கை எடுக்காததை நடுவர் அவர்களிடம் நிரூபிக்கும் விதமாக பொது தகவல் அலுவலரும் செயல் அலுவலர் எனக்கு அனுப்பிய கடிதத்தில் தகவல் எழவில்லை என பதில் மனு தந்ததையும், பிரிவு 6(3)ன்படி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை மனு மாற்றம் செய்து விடாமல் இவ்வலுவலகத்தில் இல்லை என்ற தகவல் தெரிவிக்கப்படுகிறது என வட்ட எண். 1ற்கான பதிலையும் தங்கள் முன் பார்வைக்கு வைக்கிறேன். எதிரியின் இந்த உள் நோக்கத்துடனான செயல் தங்கள் முன் பணிந்து நிரூபிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 05.03.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருவட்டார் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது. ஆனால் பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து எவ்வித அறிக்கையும் பெறப்படவில்லை.

3. எனினும் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான திருவட்டார் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை 17.03.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 25.02.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இதற்கிடையில் திருவட்டார் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 16.03.2026 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 90/2025/அ1-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு தனது விளக்கத்தை அளித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மண்டலம், திருவட்டார் முதல்நிலை பேரூராட்சியில் மேற்படி சாலையானது பேரூராட்சி அலுவலக தீர்மானம் எண். 74 நாள் 27.05.2014 ன்படி சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல், ஒரு பொது குடிநீர் குழாய் இணைப்பு அப்பகுதி மக்களுக்கு பயன்பெறும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி மின்கம்பம் தெருவிளக்கு இச்சாலை அமைத்து சுமார் 13 ஆண்டுகள் ஆகிறது.

அதன் பின்னர் 2017ஆம் ஆண்டு திரு. தேவதாஸ் அவர்களின் தகப்பனார் திரு. வேதக்கண் என்பவர் சார்பதிவு அலுவலகம் வாயிலாக உயில் ஆவணம் எழுதி அதில் 'A' பட்டியல் சொத்துக்கு திரு. தேவதாசன் B' பட்டிகை சொத்தை அவரது தம்பி பால்ராஜிடம் ஆவண எண். 63/2017ன்படி உயில் பத்திரம் பதிவு செய்துள்ளார்.

மேலும் மேற்படி திரு. தேவதாசன் என்பவர் திருவட்டார் சார் பதிவகம் ஆவணம் எண். 2018ஆம் ஆண்டு 3630ன்படி திரு. யூஜின் என்பவருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி அதில் ரோட்டருகில் கண்டம் வரை செல்ல பாதையும் ஆவணங்கள் எழுதியுள்ளார்.

மேலும் 2019ஆம் ஆண்டு 07.06.2019ஆம் நாள் திருவட்டார் சார் பதிவகம் அலுவலகம் வாயிலாக ஆவண எண். 1956/2019ல் திரு. ஜெகன் தேவதாஸ் மற்றும் ஆகியோர்கள் பொது பாதையை கிரய ஆவணம் மூலம் எழுதியுள்ளார்கள்.

மேற்படி 2021ஆம் ஆண்டு திரு. ஜாஷ் சுந்தர் ராஜ் என்பவர் கிரய ஆவண எண். 417/2021 நாள் 27.06.2021ல் சொத்து எழுதும்போது பாதை ஏதும் குறிப்பிடாமல் எழுதியுள்ளார்கள்.

எனவே, முந்தைய ஆவணங்கள் ஆரம்பத்தில் மேற்காண் நபரின் திரு. வேதக்கண் அவர்களின் மக்கள் என்பதாலும் சுமார் 14 ஆண்டுகள் முன்பே சிமெண்ட் சாலை அமைக்கும்போது தெருவில் குடிநீர் குழாய் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது ஏதும் மேற்படி இடத்தில் எந்த வேலையும் செய்யவில்லை என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

5. மனுதாரரான திரு. V. தேவதாஸ் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 17.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- "கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 213/6 R2 மற்றும் 213/6Y1Aல் உள்ள நிலம் மற்றும் வீடு திரு. ஜான் சுந்தரராஜ் என்பவரிடமிருந்து 28.06.2021 அன்று கிரயமாக வாங்கப்பட்டது. ஆவண எண். 2807/2022 (சீர்திருத்த ஆவண எண். 320/2022 நாள் 25.01.2022ல்).

- மேற்படி எனது வீட்டிற்கு அருகில் எனக்கு சொந்தமான நிலத்தில், நான் இல்லாத நேரத்தில் திருவட்டார் பேரூராட்சி ஊழியர்கள் எனது அனுமதியின்றி அவசரமாக பொது நல்லி அமைத்துள்ளனர்.

- முறைகேடாக பொது நல்லி அமைக்கப்பட்டது தொடர்பாக பேரூராட்சியில் புகார் மனுக்கள் அளித்தும் அந்த பொது நல்லியை அப்புறப்படுத்த எவ்வித நடவடிக்கையும் பேரூராட்சியால் மேற்கொள்ளப்படவில்லை.

- எனக்கு சொந்தமான புல எண். 213/6 R2 மற்றும் 213/6Y1A இடத்தில் பேரூராட்சியால் விதிமீறி மற்றும் முறைகேடாகவும் பொது நல்லி அமைத்துள்ளனர் என புகார் தெரிவித்துள்ள நிலையில், இன்று நடைபெற்ற விசாரணையில் பேரூராட்சியினர் இதற்கு சம்பந்தமில்லாத வேறொரு நபருடைய புல எண். 213/6Sல் பொதுபாதை அமைத்திடலாம் என எழுதிக் கொடுத்திருப்பதன் அடிப்படையில் பொது நல்லி அமைக்கப்பட்டது என உண்மைக்கு புறம்பாக தெரிவித்துள்ளனர்.

எனவே எனது பட்டா இடத்தில் புல எண். 213/6 R2 மற்றும் 213/6Y1Aல் முறைகேடாக பேரூராட்சியால் அமைத்த பொது நல்லியை உடனடியாக அப்புறப்படுத்த ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான திருவட்டார் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 14.03.2026 நாளிட்ட கடித ந.க. எண். 90/2025/அ1ல், தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் திருவனந்தபுரம் , P.R.S. மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதால், தன்னால் 17.03.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராக இயலா நிலையில் உள்ளதால், தனது சார்பாக பேரூராட்சி இளநிலை உதவியாளர் திரு. எஸ்.பி. பரதன் மற்றும் பேரூராட்சி குழாய் பொருத்துநர் திரு. ஆல்டின் அஜெய் ஆகியோரை மேற்படி விசாரணைக்கு ஆஜராக அனுமதியளிக்குமாறு கோரியுள்ளார்.

7 எதிர்மனுதாரரான திருவட்டார் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் கோரிக்கையினை இம்முறைமன்ற நடுவம் ஏற்று, அவர் சார்பாக திருவட்டார் முதல்நிலை பேரூராட்சி இளநிலை உதவியாளர் திரு. எஸ்.பி. பரதன் மற்றும் பேரூராட்சி குழாய் பொருத்துநர் திரு. ஆல்டின் அஜெய் ஆகியோர் 17.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தங்களது வாக்கு மூலத்தை அளித்துள்ளனர். அதில் –

- மனுதாரர் திரு. V. தேவதாஸ் என்பவரின் சமர்ப்பித்த புகார் மனு குறித்து பேரூராட்சி மன்ற தீர்மானம் எண். 74, நாள் 27.05.2014ன்படி புல எண். 213/6Sல் பொது குடிநீர் குழாயும், சிமெண்ட் கான்கிரீட் சாலையும் அமைக்கப்பட்டிருந்தது. மேற்படி இடத்தை 2017ஆம் ஆண்டு நாள் 11.07.2017ன்படி திரு. வேதக்கண் (மனுதாரரின் தகப்பனார்) என்பவர் திருவட்டார் சார் பதிவு அலுவலகம் வாயிலாக புல எண். 213/6Sல் உயில் ஆவணமாக ரோடிலிருந்து பிளானில் A. கண்டத்தில் தெற்கற்றம் போடப்பட்டுள்ள பாதையை AB. பட்டிகை உடமஸ்தர்கள் பாதையாக உபயோகித்தும் மின்கம்பம் நட்டு மின்கம்பி வலித்து மின் இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பும் எடுத்தும் பொது பாதையாக உபயோகித்துகொள்ள எழுதிக் கொடுத்துள்ளார்.
- 2021ஆம் ஆண்டு திரு. ஜான் சுந்தராஜ் என்பவரின் கிரய ஆவண எண். 417/2021 நாள் 27.06.2021ல் சொத்து எழுதும் போது பாதைய ஏதும் குறிப்பிடாமல் எழுதியுள்ளார். எனவே புல எண். 213/6Sல் உயில் ஆவணத்தின் அடிப்படையில் சுமார் 13 ஆண்டுகளுக்கு முன்பே சாலை அமைக்கும்போது தெருவிளக்கும், குடிநீர் குழாயும் அமைக்கப்பட்டுள்ளது.
- மேற்படி குடிநீர் குழாயானது தற்போதைய புல எண். 213/6Y1Aல் உள்ளதால் பொது நல்லியை அகற்றி ஒரு வார காலத்திற்குள் உரிய நடவடிக்கை மேற்கொண்டு அதன் அறிக்கையை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கிறோம் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்' என தெரிவித்துள்ளனர்.

8. இதனை தொடர்ந்து, திருவட்டார் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 30.03.2026 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 90/2025/அ1ல் இப்பேரூராட்சியின் இளநிலை உதவியாளர் மற்றும் குழாய் பொருத்துநர் ஆகியோர் 17.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் தெரிவித்துள்ளபடி, மனுதாரர் திரு. V. தேவதாஸ் என்பவருக்கு சொந்தமான இடத்திலுள்ள குடிநீர் குழாய் 24.03.2026 அன்று அகற்றப்பட்டுள்ளது என பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம், எதிர்மனுதாரரான திருவட்டார் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கைகள் மற்றும் பேரூராட்சியின் இளநிலை உதவியாளர் மற்றும் குழாய் பொருத்துநர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டம், திருவரம்பு என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. V. தேவதாஸ் என்பவர் தனது 23.01.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில், கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் பேரூராட்சிக்குட்பட்ட மனுதாரரின் சொந்த இடமான புல எண். 213/6R2 மற்றும் 213/6Y1A இடத்தில் திருவட்டார் பேரூராட்சியினரால் அத்துமீறி மனுதாரரது அனுமதியின்றி முறைகேடாக குடிநீர் பைப் லைன் அமைத்துள்ளனர் என புகார் தெரிவித்திருப்பது அறிய முடிகிறது.

மனுதாரர் திரு. V. தேவதாஸ் என்பவரின் தகப்பனார் திரு. வேதக்கண் என்பவர் திருவட்டார் பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 213/6 Sல் உள்ள இடத்தை 11.07.2017 அன்று திருவட்டார் சார் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யும்போது புல எண். 213/6 Sல் பிளானின் A கண்டத்தில் தெற்கற்றம் போடப்பட்டுள்ள பாதையை AB பட்டிகை உடமஸ்தர்கள் பாதையாக உபயோகித்தும் மின் இணைப்பு

மற்றும் குடிநீர் இணைப்பும் எடுத்து பொது பாதையாக உபயோகித்து கொள்ளலாம் என பதியப்பட்டதன் அடிப்படையில் சுமார் 13 ஆண்டுகளுக்கு முன்பே சாலை அமைக்கும் போது தெருவிளக்கும், குடிநீர் குழாய் அமையப்பட்டது என்பதை பேரூராட்சி இளநிலை உதவியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

மேலும் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் குடிநீர் குழாயானது மனுதாரருக்கு சொந்தமான புல எண். 213/6Y1Aல் அமைந்துள்ளதால் பொது நல்லியை (குழாய்)ஒரு வார காலத்திற்குள் அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் இளநிலை உதவியாளரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது. இதனை தொடர்ந்து மனுதாரர் புகாராக தெரிவித்துள்ள குடிநீர் குழாயினை மனுதாரருக்கு சொந்தமான புல எண். 213/ 6Y1Aலிருந்து 24.03.2026 அன்று அகற்றப்பட்டுள்ளது என்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மூலம் அறிய வருகிறது. இந்நிலையில் திருவட்டார் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையினை ஏற்று இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

இருப்பினும், இதுபோன்ற நிகழ்வுகள் வருங்காலங்களில் ஏற்படா வண்ணம், பொதுமக்களிடமிருந்து புகார்கள் வரப்பெற்றதும் உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்வதை உறுதி செய்திடுமாறு திருவட்டார் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. V. தேவதாஸ்,
கதவு எண். 8/30, செம்மந்தறை, திருவரம்பு அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம் - 629 161
2) செயல் அலுவலர்,
திருவட்டார் முதல்நிலை பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம்.
3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம், இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer) (பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்:</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

~~இ.கோ.~~/ உதிரிகள்.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

28/4/26

செயலாளர்.

28/4/26

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032